வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 3516/ஆ4/2024 நாள்: 26.02.2025

பொருள்: பள்ளிக்கல்வி துறை – பொதுத்தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் மார்ச் 2025 – உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் பதிவெழுத்தர் /அலுவலக உதவியாளர் – நியமன ஆணை வழங்குதல் – சார்பாக.

பார்வை: சென்னை –06 அரசுத்தேர்வுகள் இயக்குநர், அவர்களின் கடித ந.க.எண்: 015452/எச்.4/2024 நாள்: 20.12.2024.

******

ஆணை,

03.03.2025 முதல் 27.03.2025 வரை நடைபெறவுள்ள மார்ச் 2025, மேல்நிலை இரண்டாம் ஆண்டு மற்றும் முதலாம் ஆண்டு பொதுத்தேர்விற்கு இணைப்பில் உள்ள தேர்வுமையங்களுக்கெதிரே நியமனம் செய்யப்பட்டுள்ள உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் பதிவெழுத்தர் /அலுவலக உதவியாளர் நியமனம் செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இவ்வாணையை மாற்றம் செய்யவோ அல்லது இரத்து செய்யவோ கோரும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக்கொள்ளபடமட்டாது எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. தேர்வுகளை எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காவண்ணம் செயல்படவும், அரசுப் பொதுத்தேர்வுகளின் முக்கியத்துவம், மந்தணத்தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள வழிக்காட்டுதல் நெறிமுறைகள் மற்றும் அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் அறிவுரைகளை தவறாது பின்பற்றி செயல்பட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், பொதுதேர்வுகளுக்கான ஆணைகள் மந்தணத்தன்மை வாய்ந்ததால் அவற்றைக் கருத்தில் கொண்டு செயல்பட இணைப்பில் உள்ள பணியாளர்களை உடன் விடுவித்து அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது

இணைப்பு:– அலுவலக பணியாளர்களின் விவரங்கள்

27/2/25

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர் .

26/

பெறுநர்

1. மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுமைய முதன்மைக்கண்காணிப்பாளர்கள், வேலூர் மாவட்டம்.

2. சார்ந்த பணியாளர்கள் (தலைமை ஆசிரியர் வழியாக)

நகல்

- வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் /தொடக்கக்கல்வி ) தகவலுக்காகவும் தொடர்நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது .